என்று முடிவு செய்து அதுவரை இருந்தது "பி" விங்க் என்றும் பிறகு ஏற்படுபவைகள் "எ" விங்க் என்றும் வைத்திருக்கிறார்கள். இரண்டையும் ஒன்றாக ஆக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் இரு சாராரும் ஒத்துக்கொள்ளாததால் ஒருவரும் பாதிக்கப்படாத முறையில் எதைக் கையாண்டால் அந்த நிலை நாளுக்குநாள் மாறி ஒரு காலத்தில் எல்லோரையும் "எ" விங்க் ஆக்கும் முறையைக் கையாளலாம் என்பதைப்பற்றி கல்வித் துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

பள்ளி அபிவிருத்தி கூட்டங்கள்.

*686 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி அபிவிருத்திக் கூட்டம் (School Improvement Conference) ஆண்டுதோறும் கல்வி இலாகா நடத்தி வருகிறதா ?

(இ) ஆம் எனில், 1972–73, 1973–74 கல்வி ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எங்கெங்கு இந்தக் கூட்டம் நடைபெற்றது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) 1972–73ஆம் ஆண்டில் பள்ளி அபிவிருத்திக் கூட்டங்கள் உடன்குடி, நாசரேத், வள்ளியூர் என்ற இடங்களில் நடைபெற்றன. 1973–74-ல் ஷ கூட்டங்கள், திருச்செந்தூர், ஆழ்வார் திருநகரி, புதுக்கோட்டை, கடையம், திருவம்பலபுரம், பாப்பன்குளம், சேரன்மாதேவி, விக்கிரமசிங்கபுரம் மற்றும் தூத்துக்குடி என்ற இடங்களில் நடைபெற்றன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்த கான்பரன்ஸில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ? அதனால் ஏற்பட்ட நன்மைகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அபிவிருத்திக் கூட்டங்கள் என்று சொல்லி ஆங்காங்கு பொருள்காட்சிகள் எல்லாம் வைக்கிறார்கள். பொது மக்கள் ஆங்காங்கிருக்கிற பள்ளிகளுக்குத் தேவைப்படுகிற நிலங்களைக் கொடையாக வழங்கவும், பள்ளிக்கூடங்களில் பயன்படுத்தும் கருவிகள் போன்றவற்றை தருவதும், நிதி உதவி ஆகியவற்றையெல்லாம் தருகிறார்கள். அந்த வகையில் ஒன்பது ஆண்டுகள் இந்த பள்ளி அபிவிருத்திக் கூட்டங்கள் நடத்தியதின் மூலம் 513 பள்ளி அபிவிருத்திக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. 12 கோடி 96 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் பல்வேறு வகைகளில் பெறப்பட்டிருக்கின்றன.

1974 மார்ச் 30]

திரு. க. உரொ. எட்மண்ட் : இப்படிப்பட்ட மாநாடுகள் நடைபெறும் போது பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்வதற்காக பொதுமக்களால் அல்லது மாநாட்டில் பங்கேற்கிற முக்கியஸ்தர்களால் ஏதாவது ஆலோசனைகள் சொல்லப்படுகிறதா ? அந்த ஆலோசனைகளை அரசாங்கம் செயல்படுத்துகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநாடு என்றால் அது ஒரு கருத்தரங்கு என்ற வகையில் அமைவதில்லை. இது சாதாரண விழாவாக நடக்கிறது. பொருள்களைக் கொண்டு காட்சியாக வைக்கிறார்கள். மாநாடுகளில் கலந்துகொள்ள பொதுமக்களுக்கு ஊக்கம் தந்து நன்கொடை தருபவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நடைபெறுகிறது. கருத்தரங்கு என்றால் அதில் கருத்துக்கள் பரிமாறப்பட்டு யோசனைகள் எல்லாம் பரிசீலிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டால் அதை கல்வித் துறை ஆராய்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது என்று செய்யலாம். ஆனால் அந்தக் கூட்டங்களில் அப்படி யோசனைகள் சொல்லி தீர்மானங்கள் நிறைவேற்ற வாய்ப்பிருக்கிறது. ஆனால் கட்டாயப்படுத்தப்படவில்லை.

பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ ஆய்வு.

*687 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளிக் குழந்தைகட்கு மருத்துவப் பரிசோதனைத் திட்டம் தமிழ் நாட்டில் எந்தெந்த நகரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

(இ) இதற்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ ஆய்வு செய்யும் திட்டம் தமிழ்நாட்டில் திருச்சி, கோயம்புத்தூர், ஆகிய இரண்டு நகரங்களிலும் மற்றும் சென்னை மாநகரிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இதற்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 3,21,738.00.

திரு. நா. வீராசாமி . சென்னை, திருச்சி போன்ற இடங்களில் இப்படிப்பட்ட வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக மாணவப் பருவத்திலேயே சில நோய்கள் வருவதாகவும், அப்படி வருகிற நோய்கள், லெப்ரஸி போன்ற நோய்கள் இந்த நாட்டில் மாணவர்களிடையே சராசரி ஐந்தில் இருந்து பத்து சதவிகிதம் வரை இருப்பதாகவும் ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட்ஸ் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பயங்கரமான நோய் மாணவப் பருவத்தில்